REGD. No. M. 6311

PHONE No. [illegible]

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 209

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மாசி 2உ சனி (13—2—54) ☆ ★ ★ வெளியூர்: மாசி 3உ ஞாயிறு (14—2—54)

திராவிட நாடு—மாணவர் பங்கு?

செயலாற்றும் திறம்—ஆற்றலும் அறிவும் கொண்ட சக்தி—திராவிட மாணவர் போர்ப் படை

—(:)—

இலங்கை ஒப்பந்தம் தென்னாடு—வடநாடு பேதத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு

மொழிவழி பிரிவதும் இனவழி கூடுவதும் இயற்கை நியதி

தோழர் இரா. நெடுஞ்செழியன் கருத்துரை

சென்னை, பிப். 13—

"மூன்றாம் பானிபட் யுத்தத்தின் காரணங்களைப் பற்றியும், பிரெஞ்சுப் புரட்சியின் பின் விளைவுகளைப் பற்றியும், அக்பர், பாபர், கஜனி, கோரி ஆகியோரின் படையெடுப்பைப் பற்றியும், ஆற்காட்டை ஆங்கிலேய வியாபாரிகளின் தலைவன் கிளைவ் [illegible], ஏகாதிபத்திய விதையை இந்த நாட்டில் எப்படி ஊன்றினான் என்பதைப் பற்றியும்—இறந்தகால அரசியல் வரலாற்றைப் படித்துத் தெரிந்து கொள்ளுகிற மாணவர்கள், தாங்கள் வாழும் காலத்திய நிகழ்கால அரசியலைப் பற்றி ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது? அந்த அரசியல் அறிவை அவர்கள் பெறுவது எப்படித் தவறாகும்? ஆனால் அவர்கள் நேரிடையாக, அரசியல் கட்சியினர் நடத்தும் போராட்டங்களிலே கலந்து கொள்ளத் தேவையில்லை."

"திராவிட மாணவர்கள், போராட்டங்களிலே கலந்து கொள்வதுதான் நாட்டிற்குச் செய்யும் பணியல்ல; போராட்டங்களிலே ஈடுபடாமலேயே, மக்களிடையே நாட்டுப் பற்றை வளர்க்கவும், இனப்பற்றை ஊட்டவும் முடியும். திராவிடத்தின் இயற்கை வளங்கள் எந்தெந்த வகையிலே, வேறுபல நாடுகளின் வளங்களைக் காட்டிலும் சிறந்தது—நாம் கேட்கிற திராவிட நாட்டைக் காட்டிலும் உலகிலே உள்ள எத்தனை நாடுகள் எவ்வளவு சின்னஞ் சிறியன—அங்கே வாழும் மக்கள் தொகை என்ன?—இவைகளை எல்லாம் ஓவியங்களாக்கி, புள்ளி விவரங்களோடு, தெளிவில்லாத மக்களுக்குத் தர முடியும். 3 லட்சம் மக்களை மட்டும் கொண்ட லக்சம்பர்க், சில ஆயிரம் பேரைக் கொண்ட மொராக்கோ, டென்மார்க், ஸ்வீடன், நார்வே, இன்னும் இவை போன்ற எத்தனையோ நாடுகள் உலகிலே தனித்தியங்கும்போது நாம் ஏன் தனித்து வாழக்கூடாது என்ற எண்ணத்தை மக்களிடையே வளர்க்க முடியும்."

—இவ்வாறு, நேற்று மாலை கோகலே மண்டபத்தில், சென்னை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற தூத்துக்குடி நிதியளிப்புக் கூட்டத்தில் பேசுகையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"இன்று திராவிட மாணவர்கள் தங்கள் கடமையைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியும்—பெண்கள்—ஆண்கள்—தொழிலாளர்கள்—விவசாயிகள்—சிறிய வியாபாரிகள்—மாணவர்கள் ஆகிய எல்லோரும், ஒரு சமுதாயத்திலேயே பிறந்து [illegible], அரசாங்கம் வீசும் அடக்குமுறைகளை எதிர்க்கவேண்டிய பொறுப்பும், கடமையும் கொண்டவர்கள் தான். அந்த வகையிலே அறிவும் ஆற்றலும் மிக்க மாணவர் பகுதி தன் கடமையைச் செய்கிற நேரத்திலே சிலர், 'இம்மாதிரி அரசியல் கிளர்ச்சிகளில் மாணவர்கள் பங்கு பெறலாமா?' என்று கேட்கிறார்கள்.

மாணவர்கள் கல்வி கற்பதிலேயே தங்கள் முழு [illegible]த்தையும் செலுத்த வேண்டுமென்றும், அரசியலிலே பங்கு பெறவே கூடாதென்கிற 'மேதை'களும், 'மாணவர்கள் தங்களின் முழுச் சக்தியையும் அரசியலிலேயே நேரிடையாகச் செலுத்த வேண்டும்,' என்கிற 'புரட்சிக்காரர்'களும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் நாம், 'மாணவர்கள், அன்றாட அரசியல் நிலைகளை நன்றாகத் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்; ஆனால் அரசியலில் நேரடியாக ஈடுபடத் தேவையில்லை,' என்கிறோம்.

'திராவிட மாணவர்கள் எல்லாம், செயலாற்றும் திறம் படைத்த செம்மல்களாய், ஆற்றலும் அறிவும் பெற்ற சிறந்த சக்திகளாய், முன்னேற்றக் கழகத்தின் போர்ப்படையாக இருக்கவேண்டும்."

"இன்றைய நிலையிலே தென்னாட்டு மக்களுக்கு உள்ள உண[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

தொடர்ந்து அவர் குறிப்பிட்டார்:—

"இன்று இந்தியாவெங்கும் மொழிவழி மாகாணக் கிளர்ச்சி வலுத்து நிற்கிறது. நிச்சயமாக, நாடு, மொழிவழி பிரியத்தான் போகிறது. பிரிந்து, இன வழி ஒன்றுபடத்தான் போகிறது. ஒரு பட்டாளம் சின்னாபின்னமாக சிதறி, பிறகு, கூட்டம் கூட்டமாக ஒன்று சேர்வதைப் போன்றுதான், இந்த நாடு, மொழிவழி பிரிந்து, இன வழி ஒன்றுபடப் போகிறது. எங்கோ இருக்கும் ஆஸ்திரேலியாவும், கானடாவும், எங்கோ இருக்கும் பாகிஸ்தானும், ஆப்பிரிக்காவும், காமன்வெல்த் என்ற கூட்டணியில் அமையும்போது, அட்லாண்டிக் கடற்கரையிலே உள்ள நாடுகள் எல்லாம் அட்லாண்டிக் நாடுகளாய் ஒன்று சேரும்போது, எங்கெங்கோ இருக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளெல்லாம் ஒன்றுபடும்போது, இந்தியாவும்—சைனாவும்—ரஷ்யாவும் கோமின்பாரமாக உருவெடுக்கும்போது, ஏன் தமிழகமும், ஆந்திரமும், கேரளமும், கன்னடமும் திராவிடக் கூட்டாட்சியாக மலரக் கூடாது மலர முடியாது? இந்தியா மொழி வழி பிரிந்தால் ஆந்திரன், நேற்று வரை ஒன்றாய் வாழ்ந்த தமிழனோடு வாழ்வதைக் காட்டிலும், குஜராத்தியோடு, வங்காளியோடு, பஞ்சாபியோடு வாழ்வதையா விரும்புவான்?—இவற்றையெல்லாம மாணவர்கள்தான் சாதாரண மக்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும்."

தூத்துக்குடி நிதிக்கு ரூ. 801 சென்னை மாணவர் தந்தனர்

—(:)—

அடக்குமுறை ஆட்சிக்கு திராவிட மாணவர் உலகின் பதில்

—(:)—

ஆர்வமிக்க இளைஞர் கூட்டத்திடையே தி. மு. கழகத் தலைவர்கள்

தோழர்கள் பொன்னம்பலனார், கருணாநிதி, நடராசன் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்

சென்னை, பிப். 13—

நேற்று மாலை 6-மணிக்கு, கோகலே மண்டபத்தில், சென்னை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டமொன்று நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் நாஞ்சில் கி. மனோகரன் தலைமை தாங்கினார்.

மாணவத் தோழர்களான மாலன், கண்ணன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கூட்டத் துவக்கத்தில் 'தூத்துக்குடி வழக்கு நிதிக்கு மாணவர்கள் ஏன் பணம் தருகிறார்கள்?' என்பதை விளக்கிப் பேசினர்.

பின்னர், தி. மு. கழகத்தின் முன்னணி வீரர்களான தோழர்கள் கருணாநிதி, என். வி. நடராசன், அ. பொன்னம்பலனார், நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் கே. ஏ. மதியழகன், திராவிட இயக்கத்தில் மாணவர்கள் பணி பற்றிப் பேசிவிட்டு, பச்சையப்பன் கல்லூரி மாணவத் தோழரான பார்த்தசாரதியை தூத்துக்குடி நிதியை பொதுச் செயலாளர் அண்ணாதுரையிடம் தருமாறு வேண்டிக்கொண்டார்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் ரூ. 300, சட்டக் கல்லூரி மாணவர்கள் ரூ 115, எத்திராஜ் பெண்கள் கல்லூரி

(4-ம் பக்கம் பார்க்க)

இராணுவ உதவி அளிக்க முடிவு

—o—

பாகிஸ்தானுக்கு இராணுவக்குழு வருகிறது

தளவாடப் பட்டியல் தயாரிக்கப்படுமோம்!

வாஷிங்டன், பிப். 12—

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி அளிக்க முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது.

பாகிஸ்தான் இராணுவத்தை பலப்படுத்துவதற்கு என்னென்ன இராணுவத் தளவாடப் பொருள்கள் தேவை என்ற ஒரு பட்டியலைத் தயாரிக்க அமெரிக்க இராணுவக் குழு ஒன்று கூடிய சீக்கிரத்தில் கராச்சிக்குப் புறப்படும்.

ஒரு இராணுவ, பொருளாதார கலாச்சார ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு துருக்கியும்—பாகிஸ்தானும் இப்போது ஒரு இரகசிய பேச்சு நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. அமெரிக்க சர்க்காரின் முடிவு, இந்த இரகசியப் பேச்சு முடிவடைந்த பிறகு தான் பகிரங்கப்படுத்தப்படுமோம்.

சர்க்கார் அப்பீல் அழைப்பை ஐவர் பெற்றுக்கொண்டனர்

—o—

பிப்ரவரி 19-ந் தேதி வழக்கு எனக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது

சென்னை, பிப். 13—

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன், நடராசன் ஆகிய ஐவருக்கும் 1-9-53-ந் தேதியன்று, சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் அவர்களால் விதிக்கப்பட்ட ரூ. 500 அபராதம்—கட்டத் தவறினால்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 13—2—1954 சனி

கடிக்காமல் இருந்தால் நல்லது!

'நரி வலமாக வந்தால் நல்லதா? இடமாக வந்தால் நல்லதா?' எனக் காலையில் வயல் பக்கம் சென்று வந்த ஒருவன், முதியவர் ஒருவரை வினவினன். 'எப்படியாவது நரி வந்து தொலையட்டும்; மேல் விழுந்து கடிக்காமல் இருந்தால் நல்லது!' என்று முதியவர் பதிலளித்தார்.

அதிகாலையில் நரி முகத்தில் விழித்த இளைஞனைப்போல்தான், கனம் ஆச்சாரியார் அவர்களின் முதலமைச்சர் பதவி பற்றிய எதிர்காலத்தில் அக்கரை கொண்டு இருக்கிறார்கள். அவர் பதவியை விட்டுத் தொலைய வேண்டும் என்று பலர் கருதுகிறார்கள். அவரை எப்படியாவது பதவியிலிருந்து விரட்ட வேண்டும் என்று, காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்களில் பலர் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

அவர் எப்படியும் பதவியை விட்டுத் தொலைந்தாக வேண்டும் என்பதுதான் நம்முடைய கருத்தும். ஆனால் அவர் பதவியிலிருந்து வெளியேறுவதற்கு மற்றவர்கள் கொண்டுள்ள காரணத்திற்கும், நமது தி. மு. கழகம் கொண்டுள்ள காரணத்திற்கும் ஒரு துளியும் தொடர்பு கிடையாது. தொடர்பு இல்லாததோடு, ஒன்றுக்கொன்று முரண்படக் கூடியதாகக்கூட இருப்பதாகும்.

கனம் ஆச்சாரியார் முதல் அமைச்சர் பதவியைக் காலி செய்து வெளியேறினாலுங்கூட, அவர் விட்டுச் சென்ற இடத்தை நிரப்ப இருப்பது காங்கிரஸ் கட்சிதான் என்பது அனைவருக்கும் தெரியும். அதனால், ஆள் மாற்றம் ஏற்படுவதைத் தவிர, அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்பட்டு விடாது என்பதையும் நாம் தெரிந்தே இருக்கிறோம்.

அமைச்சர் குழுவை உருவாக்கும் எண்ணிக்கை பலம் இப்பொழுது காங்கிரஸ் கட்சிக்குக் கணிசமாக இருக்கிறது. அப்படி ஏதாவது குறைவிருக்கிறது என்று கற்பனை செய்து பேசுவதானாலும், இப்பொழுதும் இடம் மாற எத்தனையோ மாணிக்கங்கள் சட்டசபையில உண்டு. அதுகளைப் பிடித்துக் குறைவை நிறைவு செய்து சர்க்கார் கொலுவில் வீற்றிருக்கச் செய்வது எந்தக் கட்சிக்கும் இலகுவானதேயாகும். அதிலும் காங்கிரஸ் கட்சிக்கு அது மனப்பாடம். எனவே, ஆச்சாரியார் முறையைப் பின்பற்றி, கட்சி பலத்தைப் பெருக்கி, ஆட்சி பீடத்தில் அமருவது காங்கிரசால் நிறைவேற்றக்கூடிய சாதாரண விஷயமேயாகும். நிற்க,

ஆச்சாரியாரை விரட்ட வேண்டும் என்பதில் தீவிரப் பங்கு கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியினருக்குள்ள காரணம், ஆச்சாரியார் கூறுவதுபோல், கொள்ளையில் பங்கு கேட்பதாக இருந்தாலும் இருக்கலாம், வகுப்புவாதமாக இருந்தாலும் இருக்கலாம், பதவி மோகமாக இருந்தாலும் இருக்கலாம், முன்னாள் மூண்ட பகையின் எதிரொலியாக இருந்தாலும் இருக்கலாம், இவைகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு வேறு ஏதாவது வேண்டுமானாலும் இருக்கலாம். அது அவர்கள் குடும்ப விஷயம்.

பழுதுபட்டுப் போன காங்கிரசில். இன்னமும் பட்டுப் போகாமல் இளமுறுக்கோடு தாண்டவமாடிவரும் அதிகார அரசியலின் பயங்கரத் தோற்றம் இது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். கனம் ஆச்சாரியார் பதவியை விட்டு விலக வேண்டும் என்றுதான் நமது கழகமும் விழைகிறது. அதற்காக, நாம் கொண்டுள்ள காரணங்கள் ஒவ்வொன்றும் சிறந்ததாகும்.

பொதுமக்களின் வாக்குகளைப் பெறாத ஒருவர், மக்களாட்சி முறையில் சர்க்காரை நடத்திச் செலுத்தும் முதல் அமைச்சராகப் பதவியேற்பதும், பதவியில் ஒட்டிக்கொண்டு இருப்பதும் மக்களாட்சி மரபுக்கு மாறுபட்டது என்பதும், அந்த முறையில்லா முறையைப் பின்பற்றி அமைச்சர் பீடத்தில் அமர்ந்திருப்பது அறமாகாது என்பதும், அவர் பதவியை விட்டகல வேண்டியதுதான் முறை என்பதும், ஆச்சாரியார் வெளியேற்றத்திற்கு நாம் கூறும் முதல் காரணமாகும்.

ஒன்றைக் கூறி மக்களிடம் வாக்குகள் பெற்று சட்ட சபைக்குள் நுழைந்த பிறகு, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறும்படி, பகட்டான பதவியைக் காட்டி அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது, முறைகேடானது, எதிர்காலத்தில் பயங்கரமான விளைவுகளை நாட்டு நடைமுறையில் உண்டாக்கக்கூடியது என்பது நமது கருத்து.

இந்த அரசியல் சூதாட்டத்தை ஆச்சாரியார் மனம் ஒப்பி செய்திருப்பதால், அதையே அவர் விலகுவதற்கான இரண்டாவது காரணமாகக் கொண்டிருக்கிறோம்.

கனம் ஆச்சாரியாருக்கு எதிராக, புதிய கல்வித் திட்டம் பற்றி, சட்டசபையில் நிறைவேறிய தீர்மானத்துக்குக் கட்டுப்பட மறுத்த ஆச்சாரியாரின் எதேச்சாதிகாரத்தனம், எல்லா அரசியல் மரபுக்கும் விரோதமாக இருப்பதால், அதையே, மூன்றாவது காரணமாகக் காட்டி, அவர் பதவியை விட்டுத் தொலைய வேண்டும் என்கிறோம்.

புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்த முறையும், அதில் உள்ள கேடான விளைவுகளும், அவர் அகலுவதற்கான நான்காவது காரணமாக நாம் கொண்டிருக்கிறோம்.

அவருக்கு இயல்பாக உள்ள எதேச்சாதிகார புத்திக்கும், எதிர்ப்புக்கு மதிப்பளிக்க மறுக்கும் அவருடைய இறுமாப்புக்கும், தாம்தான் புத்திசாலி, மற்றவர்கள் மதியீனர்கள் என்று அவருக்கிருக்கிற தலை வீக்கத்திற்கும், வளர்ந்துவரும் மக்களாட்சி முறையில் துளியும் இடம் கிடையாது என்ற காரணத்துக்காகவும் அவர் வெளியேறுவதை நாம் வரவேற்கிறோம்.

இது தவிர நமக்கு, கனம் ஆச்சாரியார் இலேசாக ஆகிவிட வேண்டுமென்பதற்கு வேறு உள்ளெண்ணமே கிடையாது. இந்த, நமது உள்ளக்கிடக்கையை ஒப்ப மறுப்பவர்கள் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவை இல்லை

அவர் விலகுவதற்கு நாம் கொண்டுள்ள காரணங்களுக்கெல்லாம் அவர் பரிகாரம் தேட முன்வருவாரானால், அவர் அடுத்தப் பொதுத் தேர்தல் வரை முதலமைச்சராக இருப்பதில நமக்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது.

இப்படி நாம் கூறுவதை, காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு நாம் பல்லாண்டு கூறுவதாக புத்தி படைத்தவர்கள் கொள்ள மாட்டார்கள். பொதுத் தேர்தலுக்கு ஒரு காலவரையறையும், சர்க்கார் அமைப்பதற்கு ஒரு குறிப்பிட்ட முறையும இருக்கிறது என்ற உண்மையைத் தெரிந்தவர்கள், நமது முடிவிற்குத்தான் வந்தாக வேண்டும்.

ஆச்சாரியார் பதவியை விட்டு விலகினாலும விலக மற்போனாலும், காங்கிரஸ் கட்சியே ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் என்ற சூழ்நிலை இருப்பதினால, முதியவர் கூறினது போல், நரி போன்ற ஆச்சாரியார் மக்கள்மேல் விழுந்து கடிக்காமல் இருப்பதுதான் நல்லது என்று நாம நினைக்கிறோம.

ஆனால், அவர் நாட்டு மக்கள்மேல் விழுந்து கடித்துக் காயப்படுத்தி வருவதை நாம் தினம தினம் கண்டு வருகிறோம். மேல் விழுந்து கடிக்கும் நரிக்குப் பதிலாக, இடமாகவாவது, வலமாகவாவது வருகிற நரியாட்சி மேலானது என்று எண்ணுவதில் என்ன தவறு? எனவே, மேல் விழுந்து கடிக்கும் நரியாக உள்ள கனம ஆச்சாரியார் உடனடியாகப் பதவியை விட்டு விலகுவதைத்தான் பொதுமக்கள் வரவேற்பர். இதில் புதுமை ஒன்றுமில்லை!

ஆஸ்திரேலிய ஆடுகள் இந்தியா வருகின்றன.

—o—

எல்லா மாநிலங்களும் நிலைமையை கவனிக்கின்றன!

—::—

லட்சுமணபுரி, பிப். 12—

ஆஸ்திரேலியாவிலிருந்து 210 ஆடுகள் மார்ச் 1-ந் தேதி பம்பாய் வந்திறங்கும். அவை, ரிஷிகேசிற்கு அருகிலுள்ள 'பசுலோக்' என்ற இடத்திற்கு அனுப்பப்படும். ஆடுகளுடன் ஒரு ஆஸ்திரேலியரும் வருகிறார். அந்த ஆடுகளுடன் அவர் சில நாட்கள் தங்கியிருப்பார்.

'பசுலோக்'கிலுள்ள பண்ணை மகாத்மா காந்தியின் சீடரான சரலாபென் எனும் ஆங்கில மாதினால் நடத்தப்படுகிறது.

இந்த ஆடுகள் உத்திர பிரதேச மாநிலத்திற்கு பரிசாக ஆஸ்திரேலிய சர்க்காரால் அளிக்கப்பட்டுள்ளது.

உத்திர பிரதேசத்தின் இந்தச் சோதனையை இதர மாநில சர்க்கார்கள் கவனித்து வருகின்றன. இந்தத் திட்டம் காரணமாக வெளிநாட்டிலிருந்து கம்பளி ரோமம் வரவழைக்க அவசியமில்லாது போகும்.

ஆஸ்திரேலிய ஆடுகளுடன் இந்திய ஆடுகளைச் சேரவிட்டு, புதுரக (கிராஸ்ப்ரீட்) ஆடுகள் உற்பத்தி செய்யப்படும்

இந்தியாவில் எஃகு உற்பத்தி

அமெரிக்க நிபுணர் கருத்து

பிரின்ஸ்டன், நியூஜெர்ஸி, பிப். 11—

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் எஃகு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா முக்கியத்துவம் பெறக்கூடுமென பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொருளாதாரப் பூகர்ப்ப நிபுணர் பேராசிரியர் எட்வேர்டு ஸாம்ஸன் அபிப்பிராயப்பட்டுள்ளார்

அவர் மேலும் சொன்னார்:—

"ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் பெரும் பகுதிகள் எஃகு உற்பத்தி செய்கிறதில்லை; தேவை அதிகரித்தால் இந்தியா தன் எஃகு உற்பத்தியை அதிகரிக்கலாம் இயந்திர வசதிகளை மூலதனம் ஆகியவை குறைந்ததும், ஏற்றுமதி செய்வதில் தடைகளும் இருப்பதுதான் இந்தியாவின் தொழில் பிரச்னைகள் ஆகும்."

'நிலமளிக்க சர்க்கார் முவைந்தது என்ற செய்தி உண்மையல்ல'

—— (:) ——

ஆதிவாசி அறப்போர் தலைவரின் விளக்கம்

நாசிக், பிப் 12—

நாசிக் மாவட்டப் பகுதியில் உள்ள ஆதிவாசிகுடிகள், உழுதப் பயிரிடுவதற்குச் சொந்தத்தில் நிலம் வேண்டும் என்பதற்காக, சர்க்கார் புறம்போக்கு நிலங்களைக் கைப்பற்றி உழ அறப்போர் தொடுத்துள்ளதும், அதன் விளைவாக நூற்றுக்கணக்கானவர்களைக் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டிருப்பதும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அறப்போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஆதிவாசிகளுக்கு 4,000 ஏகர் நிலத்தைக் கொடுத்திருப்பதாக ஒரு செய்தியை நாசிக் கலெக்டர் பத்திரிகைக்கு செய்தி கொடுத்துள்ளார்.

இதை மறுக்கும் முறையில் அறப்போர் குழுத் தலைவர், சர்க்காரால் கொடுத்துள்ளதாகக் கூறப்படும் நிலம் ஏற்கனவே ஆதிவாசிகளுக்குத் தற்காலிகமாகக் கொடுக்கப்பட்டு அவர்களால் பயிர் செய்யப்பட்டு வருகிறது என்றும், அப்படி பயிர் செய்ய தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ள நிலமும், நிலம் படைத்த ஆதிவாசிகளுக்கே ஒதுக்கப்பட்டுள்ள நிலமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உழு நிலம் வேண்டும் என்ற கோரிக்கையை, நாசிக் மாவட்டக் கலெக்டரிடம் வெளியிட்டதாகவும், அவர், அதை ஏற்றுப் பரிகாரம் தேட மறுத்துவிட்டதாகவும், அதற்குப் பின்னரே ஆதிவாசிகள் நேரடி நடவடிக்கையான அறப்போரில் ஈடுபட முன்வந்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அறப் போரில் ஆதிவாசிகள் முனைந்துள்ளது தங்களுடைய குறைகளைக் களைந்துகொள்ளவே அல்லாது, சர்க்கார் அதிகாரிகளை அலட்சியப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல என்றும் அவர் அறப்போர் குறித்து விளக்கம் கொடுத்துள்ளார்.

எகிப்துக்கு இரும்புத் தொழிற்சாலை

மேற்கு ஜேர்மன் கம்பெனி நிர்மாணிக்கும்

கெய்ரோ, பிப் 12—

கெய்ரோவுக்கு 26 மைல் தூரத்திலுள்ள ஹில்வான் என்ற இடத்தில் இரும்ப, எஃகு தொழிற்சாலையை நிர்மாணிக்க மேற்கு ஜெர்மனி கம்பெனி ஒன்று உதவி செய்யும் என்று தெரிகிறது. இதற்கான உடன்படிக்கை கையெழுத்தாகியிருக்கிறது.

ஆண்டு ஒன்றுக்கு 1,25,000 டன் இரும்பு உற்பத்தி செய்யப்படுமாம். எகிப்து சர்க்காரும், ஜெர்மன் கம்பெனியும் கூட்டாக மூலதனம் போடும்.

யுத்தக் கைதிக்கு அடித்த அதிருஷ்டம்!

லண்டன், பிப். 12—

ஜெர்மன் வாலிபர் ஒருவர், யுத்தக் கைதியாக பிடிபட்டு, பிரிட்டனுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சக்செக்ஸ் என்ற ஊரில், ஒரு பெண்மணியினுடைய பண்ணையில் வேலைக்கு அமர்த்தப்பட்டார். அங்கு, அக்கைதி உழைக்க ஆரம்பித்த நேரம் முதல் அந்த பெண்மணிக்கு வியாபாரம் பன்மடங்காகப் பெருகியது.

கடைசியில், அந்த யுத்தக் கைதி ஜெர்மனிக்குத் திரும்பிய போது அந்தப் பெண்மணி பெரிய பணக்காரியாகிவிட்டாள். இப்போது அவள் இறந்துவிட்டாள் தன் சொத்தில் பெரும் பகுதியை அவள் இக்கைதிக்கு எழுதிவைத்திருக்கிறாள்.

பார்லிமெண்ட் உறுப்பினர் சினிமாவில் நடிக்கிறார்

கொழும்பு, பிப். 12—

இலங்கை பார்லிமெண்டின் உறுப்பினராக இருந்த டி. பி. இலங்கரத்ன. இப்போது 'வரதா கவுடா' (பார் தவறு?) என்கிற சிங்களப் படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார். இவர் 10 ஆண்டு காலம் இலங்கை சர்க்காரில் சேவை செய்தவர்.

வேலையில்லாதோர் எண்ணிக்கை

புள்ளி விவரம் காட்டும் அபிவிருத்தி!

புதுடில்லி, பிப். 12—

1953 டிசம்பர் மாதத்தில், வேலை யளிப்பு நிலையங்களின் மூலம் வேலையில அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அபிவிருத்தி காணப்பட்டது. சர்க்கார் துறை தனிப்பட்டோர் துறை இரண்டிலும் இந்த அபிவிருத்தி இருந்தது; மொத்தம் 15,215 பேருக்கு வேலை தேடித் தரப்பட்டது. இந்த மாதத்தில், வேலையளிப்பு நிலையங்களில் பெயர் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1,25,817 ஆகும.

பொதுவாக வேலையளிப்பு நிலவரத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகக் கூறமுடியாது; 1953-ம் ஆண்டின் கடைசி தினத்தன்று, வேலையளிப்பு நிலையங்களின் உதவிக்குப் பின்னும் வேலை தேவையாயிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5,22,360 ஆக இருந்தது.

75,000 பேர்களுக்கு ஒரு தொகுதி!

கொழும்பு, பிப். 12—

இலங்கை மக்கள் தொகை 30,98,637 பேர் என்று 1953 சென்சஸ் மூலம் தெரிய வருகிறது. 75,000 பேர் கொண்டவர்களுக்கு ஒரு தொகுதி வீதம் தொகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

ஆணவத்திற்கு எதிராகவே 'போர் முரசு' எழுப்பினேம்!

—(:)—

ஏமாற்றப்படுவதற்கு நாம் ஏமாளிகளல்ல!

கல்வித் திட்டத்தின் போக்கு சம்பத் பேச்சு

6—2—54-ல், சேலம், அம்மாப்பேட்டை 23-வது வட்ட தி மு கழகச் சார்பில், தோழர் எம். ராமசாமி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் கே. வெங்கடேசன், சிற்றணி – சுப்ரமணியம், ஈரோடு எஸ். அப்பாவு, ஆகியோர் பேசினர்.

கடைசியாக தோழர் ஈ. வி. கே. சம்பத் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சென்னையில், 'காட்டுமிராண்டித்தனம்,' என்று நேரு எதைக் கூறினாரோ, அதுதான் கல்யாணியிலே நடந்தது. மொழிவாரியாக மாநிலங்கள் பிரிய வேண்டுமென ஒவ்வொரு மாநில காங்கிரஸ்காரர்களும் அங்கே, கச்சை வரிந்து கட்டினர். ஒரு கட்சி வளருவதற்கு ஒரு பொது லட்சியம் வேண்டும்; காங்கிரசுக்கு அது இல்லை

நேரு, திருவாங்கூரில் பேசுகையில், ' தேர்தல் வரும் — போகும்; என்றாலும், காங்கிரஸ் தான் ஆட்சியிலிருக்கும்,' என்று பேசியிருக்கிறார். இதுவா ஜனநாயகம்? மேலை நாட்டிலே இப்படி அல்ல; சர்க்கார் மாறும்— ஆனால் ஜனநாயகம் காப்பாற்றப்படும்."

சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் கொண்டு வந்த கல்வித் திட்டத்தை எதிர்த்து பலர் கைதாயினர் — தொல்லைகளுக்காளாயினர். இந்த கல்வித் திட்டப் போராட்டம் ஆச்சாரியாருக்கு எதிராக நடத்திய போராட்டமல்ல; மக்களை மதியாமல் ஜனநாயகத்தை அலட்சியம் செய்துவிட்டு அதிகாரத்தைக் கையில் பிடித்துக்கொண்டு சர்வாதிகாரம் செய்யும் ஆணவத்திற்கு எதிராக எழுப்பப்பட்ட போர் முரசு!"

"ஜூன் மாதம் நகரங்களுக்கும் அவரது கல்வித் திட்டம் பரப்பப் படுமாம் — அதுவரை நாம் ஏமாளிகளாக இருக்கமாட்டோம். கல்வித் திட்டத்தை எப்படியும் வாபஸ் பெறுமாறு செய்தே தீருவோம்."

"புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி எதிர்ப்புகள் கிளம்பும் போதெல்லாம் அப்போதைக்கப் போது ஏதாவது மாற்றிக் கூறி 'தகிடுதத்தம்' செய்கிறார்கள். 'குலக்கல்வி' என்று கூறினதும்—எதிர்த்தோம்! 'ஷிப்டு முறை' என்றார்கள் — கிராமங்களிலே 'ஷிப்டு முறை' தேவையில்லை என்றோம்! அதற்கும் இப்போது ஒரு சமாதானம் சொல்கிறார்கள்—நாம் கவலை படுவதெல்லாம் உயிரைப்பற்றியல்ல— இந்தக் கல்வி திட்டத்தால் நமது சமுதாயமே அழிய நேரிடுமே என்பதான!"

"பாகிஸ்தான் அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தை நாம் கண்டிக்கிறோம்—இந்த விஷயத்தில் நாம் இந்தியாவோடு ஒத்துழைப்போம். இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுத்தால் நாம் அதை கண்டிப்பாக எதிர்த்தே தீருவோம். அந்த பிரச்சினை தீர்ந்த பிறகு நாம் நமது கொள்கைகளை கடைபிடிப்போம்."

தென்பாலையத்தில் கோவிந்தசாமி எம்.எல்.ஏ.

7—2—54 மாலை 6 மணிக்கு தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் பாலகுருசாமி தலைமையில் தி. மு. கழகக் கிளை சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் பேசிய பின், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்களால் தற்கால அரசியல் நிலையைப் பற்றியும், குலதர்மக் கல்வித் திட்டத்தின் கொடுமைகளைப் பற்றியும் விளக்கினார். கூட்டத்தில் தூத்துக்குடி சதிவழக்கு நிதிக்காக ரூ 13—7—6 வசூலாயிற்று தென்பாலை தி மு கழகச் சார்பில் ரூ 10 அளிக்கப்பட்டது அன்று இரவு கட்டபொம்மன் நாடகத்தினரால் நடத்தப்பட்ட 'வீரபாண்டியன்' என்னும் நாடகத்திற்கு தோழர் ஏ. கோவிந்தசாமி எம் எல் ஏ, தலைமை வகித்து, நாட்டின் சீர்திருத்தத்திற்கு நாடகங்கள் எப்படி உதவுகின்றது என்பதுபற்றி விளக்கினார்.

மறுநாள் 8—2—54 காலை தென்பாலையில் நடைபெற்ற தோழர் டி. ஆர். கண்ணன்— தோழியர் கண்ணகி திருமணத்திற்கு தலைமை வகித்து சீர்திருத்த திருமணத்தின் அவசியம் பற்றி பேசினார். தோழர் பாலகுருசாமி பாராட்டுரை வழங்கினார். மணமக்களால் தூத்துக்குடி நிதிக்காக ரூ 2 தோழர் பாலகுருசாமி அவர்களிடம் அளிக்கப்பட்டது கூட்டத்தில் வசூல் செய்ததும், கழகச் சார்பில் கொடுக்கப்பட்டதும் அவரிடமே சேர்க்கப்பட்டன.

தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

கடலூர், பிப். 10—

"சென்ற ஆண்டு தில்லையில் நடைபெற்ற தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழக மாநாடுகளின் வரவு-செலவு கணக்குகளை 30—1—54 அன்று தில்லையில், மாவட்ட தி. மு க. சார்பில் தணிக்கை செய்தேன். வரவை விட செலவு ரூ. 736--7--3 அதிகமாகக் கணக்குகள் இருந்ததில், வரவு-செலவை நேர் செய்ய தோழர் தில்லை வில்லாளன் நன்கொடையாக ரூ 240-0-0-ம், தோழர் ஆர். பாலகுருசாமி நன்கொடையாக ரூ. 496-7-3-ம், ஏற்றுக் கொண்டார்கள். விவரங்களை, தெ. ஆ. மாவட்டக் குழு, கூடும்போது தருகிறேன்," என்று தோழர் இரா. இளம் வழுதி அறிவிக்கிறார்.

தாராவி தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்

பம்பாய், பிப். 11—

4—2—54ல், சம்மேளன நிர்வாகக் குழு கூட்டம் தோழர் பி. எஸ். ஆனந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, அம்பேத்கார் 62-வது பிறந்தின விழாவை தொடர்ந்து 2 நாட்கள் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது.

பாலாறு அணைக்கட்டுத் திட்டம்

அமுலாக்கக் கோரிக்கை

வாணியம்பாடி, (வ. ஆ) பிப். 11-

இக்கசர் பாளையத்தில், விவசாயிகள் சங்கச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் டாக்டர் கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எ கே. தண்டபாணி, எம். எ. பி எல், வி என். தத்தப்பன், எம், ராமகிருட்டிணன், டி. முனுசாமி சொற்பொழிவாற்றினர். 5 லட்சம் புஞ்சை நிலங்களை நஞ்சை நிலமாக்கும் பாலாறு அணைக்கட்டுத் திட்டத்தை உடன் அமுலாக்கக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை சுற்றுப் பயணம்

★

பிப். 14: தென்னாற்காடு மாவட்டச் சார்பில், விழுப்புரத்தில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம்

„ 15: சென்னையில்—திருமணம்

„ 16 முதல் 19 வரையில்: தஞ்சை மாவட்டம்:

„ 16: கும்பகோணம்

„ 17: குடவாசல்

„ 18: கோரடாச்சேரி

„ 19: நாகப்பட்டிணம்

„ 21: மதுரை நகர் தி. மு. கழகப் பொதுக் கூட்டம். இரவு-நாடகம்

„ 22: பட்டிவீரன்பட்டி மறைந்த மாவீரர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் முதல் ஆண்டு நிறைவு விழா- இரவு நாடகம்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

„ 23: சிவகாசி நிதியளிப்புக் கூட்டம்

„ 28 முதல் மார்ச் 3 வரை சேலம் மாவட்டம் சுற்றுப் பிரயாணம்

தஞ்சை மாவட்ட தி. மு. க. மாநாடு— வரவேற்புக் குழு அமைப்பு

—o—

செயற்குழு கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்

7—2—54 காலை 10 மணிக்கு, தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டம், மன்னார்குடி தோழர் ப. நாராயணசாமி இல்லத்தில், தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

எம். என். ராய், எடமேலையூர் தி. மு கழகச் செயலாளர் எஸ். ராமசாமி நீடாமங்கலம் தி. மு. கழகச்செயலாளர் விஸ்வநாதன், பட்டிவீரன்பட்டி வெள்ளையம்மாள் ஆகியோர் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

1—1—53 முதல் 31—12—53 முடிய வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டது. தஞ்சை மாவட்ட தி மு கழக 2வது மாநாட்டை தஞ்சையில் நடத்துவதென்றும், மாவட்ட குழுவே மாநாட்டு வரவேற்புக் குழுவாக இருப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தோழர்கள் எஸ் பெத்தண்ணன், பட்டு, மாயூரநாதன், சோமு, சுப்பிரமணியன் ஆகியோர் வரவேற்புக் குழுவில் தனி உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மாநாட்டு வரவேற்புத் தலைவர் —கே. கே. நீலமேகம்; செயலாளர்—எ. வி. பதி; பொருளாளர்— எஸ். பெத்தண்ணன்; தொண்டர் படைத் தலைவர் — பேராவூரணி அடைக்கலம்; விளம்பர உறுப்பினர்—எம். எம். நடராசன். செயற்குழு உறுப்பினர்கள் — ப. நாராயணசாமி, பி எஸ். பி. சாமி, எஸ் எஸ். கோவிந்தசாமி, வி. பராங்குசம், ஜி நாராயணசாமி, ஆர். பழனிசாமி, ஆர். சந்துருசங்காரவேல், பொ தருமன், எஸ். பி. சேதுபதி, கே. கே. சித்தரவேலு, வி. எம். வேலு, மா. மீனாட்சிசுந்தரன், ரெங்கராஜு, டி. வி. சம்பத், க. ரெங்கசாமி. என். எஸ். இளங்கோ, வி சுப்பிரமணியன், கே. ராமன், கோ. ராசகோபாலன், கே.பட்டு, மாயூரநாதன், சி. சுப்ரமண்யம், செல்வராஜ். பி. சம்பந்தம், சோமு

மாநாட்டை ஏப்ரல் 10, 11, தேதிகளில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டின் தலைவராக தோழர் என் வி. நடராசன் அவர்களையும், அவக்கு வைப்பவராக தோழர் ஈ. வி. கெ. சம்பத் அவர்களையும் அழைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

குடந்தை எஸ்.கே. சாமி விலக்கப்பட்டார்

—[o]—

நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்

குடந்தை, பிப். 7—

நேற்று மாலை 5 மணிக்கு தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் குடந்தை தி. மு கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது.

குடந்தை தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். கே. சாமி, தி. மு. கழகத்திலிருந்து விலகிக் கொள்வதை மாவட்டச் செயலாளருக்கோ, அது சம்பந்தப் பட்டவர்களுக்கோ அறிவிக்காமல், திராவிட கழகத்தில் கலந்து கொண்டு பணியாற்றுவதால், அவர் தி. மு. கழகத்திலிருந்து விலக்கப்பட்டார் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

புதிய செயற் குழுவிற்கு தோழர் பி. ஏ. துரைராஜ் செயலாளராகவும், சீராமுலு துணைச் செயலாளராகவும், எஸ். எஸ். கோவிந்தசாமி பொருளாளராகவும், உறுப்பினர்களாகத் தோழர்கள் கே. கே. நீலமேகம், வி. பராங்குசம், எல். ரெத்தினம், எம். ராஜமாணிக்கம், சி. தர்மலிங்கம், எஸ். என். அனந்தாச்சாரி, எஸ். பத்மநாபன், எஸ் பெரியசாமி, சி. முத்து, பி. சாமிநாதன், எஸ். என். பாபு, எஸ் ராமன், ஏ. எஸ். கே. சாமி, பி. கோதண்டபாணி, ஜி நாராயணசாமி, சி. திருவேங்கடம், ஏ. சந்தானம், கே. ஆர். சீனுவாசன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாவட்ட கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். எஸ். கோவிந்தசாமி, வி. பராங்குசம், எஸ். என். அனந்தாச்சாரி, ஜி. நாராயணசாமி, எஸ். பத்மநாபன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

16—2—54ல். பொதுச் செயலாளர் அண்ணாதுரைக்கு வரவேற்புக் கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இளைஞர் அறிவகம் துவக்க விழா

மஞ்ஞுயக்கனூர், பிப். 11—

8—2—54ல், இவ்வூரில் இளைஞர் அறிவகம் துவக்க விழா நடைபெற்றது. அதுபோது, தோழர் ப. கிருட்டினசாமி செயலாளராகவும், ஆறுமுகம் துணைச் செயலாளராகவும், ம. குமாரசாமி பொருளாளராகவும், கு. கருப்பசாமி விளம்பர உறுப்பினராகவும், மற்றும் பத்து பேர்கள் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருநெல்வேலி மாவட்ட ஆதிதிராவிட மகாஜன சங்கம்

தாராவி, பிப். 12—

சங்கத்தின் பம்பாய்க் கிளையின் நிர்வாகக் குழு கூட்டம் 6-2-54ல், வாழைக்கட்டவாடி, கனக்காடு வட்டார சங்க அறையில் தோழர் ம வ. மந்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கடந்த கூட்ட நிகழ்ச்சிகள், வெளியூர் கடிதங்கள், வரவு—செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டது. உறுப்பினர்கள் சேர்ப்பது பற்றியும், இதர காரியங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

டாக்டர் ஷாட் — இரான் சர்க்கார் ஆலோசனை

லண்டன், பிப். 11—

இரான் சர்க்கார், ஜெர்மன் நிதி நிபுணர் டாக்டர் ஷாட்டை கலந்து ஆலோசிக்கும் எனத் தெரிகிறது. 1952ல் அவருடைய யோசனையைக் கேட்கப்பட்டபோது ஆங்கிலோ — இரானிய எண்ணெய்க் கம்பெனியுடன் சுமூகமாகப் போகும்படி முசாதிக்கிற்கு அவர் ஆலோசனை கூறினார்.

கிராமச் சீர்திருத்த வாலிபர் சங்கம் திறப்பு விழா

3—2—54 மாலை, வடசிறுவள்ளூரில், தோழர் எ. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. பி. கேசவன் பேசினார். சங்கத்திற்கு கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— தலைவர்: என். பழனி; துணைத்தலைவர். கே. வைத்தி; செயலாளர் : எஸ். தனக்கோடி; பொருளாளர் கே. முனுசாமி.

முத்தமிழ் மன்றத் துவக்க விழா

சென்னை, பிப். 12—

சென்னை முத்தியால் பேட்டை சால விநாயகர் கோவில் தெருவில் முத்தமிழ் மன்றத் துவக்கவிழா நேற்று நடைபெற்றது. பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமை தாங்கி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"முத்தமிழ் மன்றம், தமிழ் மக்களின் உணர்வை தட்டி எழுப்பவும், தமிழைப் போற்றிக் காக்கவும் பயன்பட வேண்டும். உலகிலேயே வேறெந்த மொழிக்கும் இல்லாத சிறப்புகள் தமிழ் மொழிக்கு இருக்கின்றன. தமிழ் இலக்கியங்களிலிருந்து தான், ஆசியாவினுடைய நாகரீக வளர்ச்சியை அறிந்துகொள்ள முடியும். அவ்வளவு சிறப்பு வாய்ந்த நமது தமிழ் மொழியை நன்கு பேணி வளர்த்து காப்பாற்ற வேண்டியது இளைஞர்கள் கடமை" என்றார்.

அடுத்து "முத்தமிழ் வளர்ச்சிக்கு நம் கடமை" என்னும் பொருள் பற்றி தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியனும், "தமிழ் பாதுகாப்பு" என்பது பற்றி தோழர் ஈ. ஆர். கிருஷ்ணனும், "தமிழின் சிறப்பு" என்பது பற்றி புலவர் சீனிவாசனும் பேசினர்.

இறுதியாக தோழர் க. அன்பழகன் அவர்கள் "தமிழின் மறுமலர்ச்சி" என்னும் பொருள் பற்றி நீண்டதோர் விரிவுரையாற்றினார்.

மன்ற செயலாளர் நன்றி கூறினார்.

உலக பாங்கியின் வருமானம் அதிகரிப்பு

நியூயார்க், பிப். 12—

உலக பாங்கியின் வருமானம் சென்ற ஆண்டின் பிற்பகுதியில் 1,01,22,649 டாலர்கள்; 1952 பிற்பகுதியில் 76,39,743 டாலர்களாகும்.

அனுதாபம்

பொள்ளாச்சி, பிப். 9—

8—2—54 காலை 9 மணிக்கு நடைபெற்ற தென்சங்கம் பாளையம் தி. மு. கழகச் செயற்குழு கூட்டத்தில், ஆனைமலை பஸ் போக்குவரத்து அதிபர் தோழர் காசிமுத்துக் கவுண்டர் இயற்கை எய்தியமைக்கு வருந்தியும், அன்னார் குடும்பத்தாருக்கு கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபமும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

திராவிட நாடு—மாணவர்......

—0—

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வும், உடுக்க உடையும், இருக்க இடமும், வாழ வழியும், கிறிது உல்லாசமும்; ஒய்வும் தர இந்த மத்திய சர்க்காரால் முடிய வில்லை. தென்னாட்டு மக்களுக்கு, அத்தகு வசதிகளைத் தர அந்த சர்க்கார் லாயக்கற்றது என்று நாம் சொன்னால், 'உலகமே ஒன்றாக வேண்டுமென்று சொல்லும்போது, இவர்கள் இருக்கிற நாட்டையும் பிரித்துவிடச் சொல்கிறார்களே; இது நியாயமா? என்று கேட்கிறார்கள்.

உலகமோ, அல்லது ஆசியாவோ என்றுதான் ஒன்றாகப்போகின்றன? உலகம் ஒன்றாகவேண்டுமென்பவர்களெல்லாம் ஏறத்தாழ 95 நாடுகளாகப் பிரிந்து தங்கட்கென தனி எல்லை, பாதுகாப்பு, பொருளாதார வசதி ஆகியவைகளை வைத்துக்கொண்டுதானே சொல்கிறார்கள்! இன்றுள்ள அரசியல் நிலைகள், உலகம் தன்னிடையே இழைத்துள்ள எல்லைக் கோடுகளை அழித்து ஒன்றாகிவிடும் என்று சொல்வதற்கில்லை.

வடநாடு—தென்நாடு என்கிற பேதத்தைப் புரிந்துகொள்ள, சமீபத்திலே இலங்கைப் பிரதமரும், இந்தியப் பிரதமரும் செய்துகொண்டிருக்கிற ஒப்பந்தம் மட்டுமே போதுமானது!

"இலங்கையிலே, பிரஜா உரிமை இழந்து அல்லலுறும் இந்தியரின் எண்ணிக்கை 10 லட்சம்; கொத்தலவாலாவுடன் நேரு செய்துள்ள ஒப்பந்தப்படி 2 லட்சம் பேர் மட்டும் தான் இலங்கையிலே நிரந்தரக் குடிமக்களாகத் தங்கிக் கொள்ள முடியும்; மற்ற 8 லட்சம் பேர்களும், இன்னும் இரண்டாண்டுகாலம் மட்டுமே இலங்கையில் வாழ முடியும்; பிறகு இந்தியா செல்கிறு அனுப்பப்படுவார்கள்,"

என்பதாக இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர் தொண்டைமான் அறிக்கை தந்துள்ளார். 8 லட்சம் பேரை பாதிக்கக் கூடிய ஒரு ஒப்பந்தத்தை எவ்வளவு அலட்சியமாக நேரு செய்திருக்கிறார்?

அல்லல்படும் இலங்கை வாழ் இந்தியரெல்லாம் அவர் நாட்டு மக்களாயிருந்தால்—குஜராத்திகளாய், மார்வாரிகளாய், முல்தானிகளாய், சௌகார்களாயிருந்திருந்தால், 8 லட்சம் பேரின் உரிமையைக் காற்றிலே பறக்கவிடும் காரியத்தைச் செய்கிற துணிவும், மனமும் நேருவுக்கு இருந்திருக்குமா? அவதிப்படும் மக்களெல்லாம் தமிழர்கள், மலையாளிகள் தெலுங்கர் ஆகிய திராவிடர்கள் தானே? அவர்கள் அவதிப்படுவதால் நேருவுக்கு என்ன மனக் கஷ்டம்? அவர் என்ன இந்த நாட்டுக்காரராயிருந்தால் தானே மனம் வருந்தப்போகிறார்? இந்த நாட்டு மக்களைப்பற்றி எவ்வளவு அலட்சிய மனப்பான்மை அவருக்கு? ஆகவேதான் சொல்கிறோம்—இது நாடு நமக்காக வேண்டுமென!

ஆச்சாரியார், இந்த நாட்டு மக்களை—அவர்களின் பிரதிநிதிகளை—அறிஞர்களை, யாரையுமே கேட்காது ஒரு 'அரிய' திட்டத்தை கல்வி முறையின் மாற்றி ஞர். 50 ஆண்டுகளாக யோசித்து வைத்திருந்த திட்டமென்று அவர் சொல்கிறார். காலத்திற்கேற்ப, தம் கருத்தை மாற்றிக்கொள்வதுதான் அறிவுடையோர் செயல்; ஆனால் ஆச்சாரியார், 50 ஆண்டுகட்கு முன்னமேயே எடுத்த ஒரு முடிவை, 50 ஆண்டுகட்குப் பிறகும் மாற்றிக்கொள்ள மறுக்கிறார்!

திட்டத்தைப்புகுத்தும்போது தான், யாரையுமே கேட்கவில்லை என்றால், திட்டம் நடைமுறைக்கு வந்து கொண்டு வரப்பட்டு ஆறு மாதங்கட்கு அதிகமாகியும் அத்திட்டம் வெற்றி பெற்றதா. இல்லையா என்பதையும் அவர் எண்ணிப் பார்க்கவில்லை. எந்தக் கிராமத்திலாவது, இவர் சொல்கிறபடி, பள்ளி செல்லும் மாணவர் தொகை இரட்டிப்பாயிற்று? அல்லது எந்த மாணவனாவது பாதிநேரம் பள்ளி சென்று திரும்பிய பிறகு, பாதிநேரம் எங்காவது, கொல்லன் பட்டறைக்கோ, தச்சன் பட்டறைக்கோ, அல்லது, பாய் பின்னவோ, கூடை முடையவோ, பானை செய்யவோ செல்கிறார்களா?—என்றால், இல்லையென்றுதானே சொல்லவேண்டியுளது! இவ்வளவிற்குப் பிறகும் ஆச்சாரியார் அந்தத் திட்டத்தை விடாப்பிடியாக நடைமுறையில் வைத்திருக்கும்போது, வள்ளுவன் தந்த குறள் ஒன்று அவருக்குப் பொருத்தமானதாயுள்ளது:—

"ஏவவும் செய்தலான் தானும்
தேறான்
அவ்வுயிர் போம்அளவும்
நோய்,"

பிறர் சொல்வதையும் கேட்க மாட்டான்; தானும் ஆராய்ந்து அறிந்துகொள்ள மாட்டான்—அப்படிப்பட்டவன், உயிருள்ளவரைக்கும் ஒரு பெரும் நோயாவான், சமுதாயத்திற்கு—என்ற வள்ளுவன் வாக்குப்படி ஆச்சாரியார்—இந்த நாட்டிலே உள்ள அத்தனை கட்சிகள், அறிஞர்கள், ஆசிரியர்கள், சட்டசபை உறுப்பினர்கள் எல்லோருமே எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. தானாகவும் நாட்டு நிலையினை அறிந்திருக்கவும் இல்லை. ஆகவே, அவர், உயிர்போகும்வரை இல்லாவிட்டாலும், பதவியிலிருக்கிறவரைக்குமாவது ஒரு பெரும் தொழுநோய். ஆகவே இந்த நிலையை எடுத்துச்சொல்லி, மாணவர்கள் நிச்சயமாக அரசியலைத் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்."

2-கோடி ரூபாய் துணிகள் தேக்கம்

மெல்லிய ரக துணிமீது வரி குறைக்கப்படும்

ஆமதாபாத், பிப். 12-

இங்கு சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள துணி பேல்கள் போக்குவரத்து சிரமத்தின் காரணமாக தேங்கிக் கிடப்பதாக ஜவுளி வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

இந்தியப் புதுவரவு—செலவுத் திட்டத்தில் மெல்லிய ரக துணி மீது "எக்ஸைஸ் வரி" குறைக்கப்படும் என்ற வதந்தி மார்க்கெட்டில் கிளம்பி இருப்பதால் புதிய வரவு செலவுத் திட்டத்தை எதிர்பார்த்து மொத்த வியாபாரிகளும், மில்களும் கொள் முதல் விற்பனைகளை ஒத்திப் போட விரும்பியுள்ளதாகத் தெரிகிறது.

1953—54, முதலாவது கால் ஆண்டில் தரை, கடல் சுங்க வருமானம் மூலம் இந்தியாவுக்கு சுமார் 114 92 கோடி ரூபாய் கிடைத்தது.

விழுப்புரத்திற்கு... தலைவர்கள் வருகை

14—2—54 மாலை 5 மணிக்கு, மந்தகரையில், தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில், தோழர்கள் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோருக்கு வரவேற்பு அளித்து, தூத்துக்குடி வழக்கு நிதி அளிக்கப்படும்.

தலைவர்களை வரவேற்று தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., இரா. இளம்வழுதி ஆகியோர் பேசுவர்.

மாலை 4 மணிக்கு. தோழர் என். வி. நடராசன் தலைமையில் ஊர்வலமும், கொடியேற்று விழாவும் நடைபெறும்.

மயிலை சிந்தனையாளர் கழகம்

மார்ச் மாத இறுதியில், தோழர் அண்ணாதுரை மயிலாப்பூரில் பேசுவார். இடம், தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

திருக்குறள் வகுப்பு

14—2—54 காலை 10 முதல் 11 மணி வரை, செம்பியம் 20-வது வட்ட தி. மு. கழகத்தின் சார்பில், கழக இல்லத்தில், (115, கடைத் தெரு மாடியில்) திருக்குறள் வகுப்பு நடைபெறும். ஆசிரியர் ச. மாணிக்கம் அவர்களால் 'இறை மாட்சி' என்ற அதிகாரம் விளக்கப்படும்.

கண்டனக் கூட்டம்

சென்னை. பிப். 13—

14-2-54 மாலை 5-30 மணிக்கு, சென்னை சமாதானக் குழுவின் சார்பில், திருவல்லிக்கேணி கடற்கரையில், பாக்-அமெரிக்கா இராணுவ ஒப்பந்தத்தைக் கண்டிக்க ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, எம். எல். ஏ., என். கல்யாணசுந்தரம், எம். எல். ஏ., என். பி. ஆதித்தன், டி. என். ராமானுஜம், எஸ். எம் பாசில், சாமி சிதம்பரனார் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவர். சென்னை ராபின்சன் பார்க்கிலிருந்து மாலை 3 மணிக்கு ஒரு ஊர்வலம் புறப்படும்.

—:—:—

திரு. வி. க. நினைவு நிதி

சென்னை தமிழ்ச் சங்கத்தின் திரு வி. க. நினைவு நிதிக் குழுவினர் அறிவிப்பது:—

முன் வரவு ரு 6162—1—9. பெரம்பூர் ஆர். பி. சி. சி. உயர்நிலைப் பள்ளி ரு 94—4—0; சென்னை லயோலா கல்லூரித் தமிழ்ப் பேரவை ரு 201; வி. இராமசாமி முதல் வகுப்பு லயோலா கல்லூரி ரு 5; வேலூர் ஊரிஸ் கல்லூரித் தமிழ்க் கழகம் ரு 200; கு. வைத்திலிங்கம் முதலிய 104 அன்பர்கள் ரு. 160; பா. ஆறுமுகம் முதலிய 19 அன்பர்கள் சிங்கப்பூர் ரு. 62; வேலூர் மகிழ்நன் தமிழ்க் கழகத்தாரும் பொதுமக்களும் ரு 325; சில்லரை வரவு ரு 1;

ஆக மொத்தம் ரு. 7210-5-9.

தூத்துக்குடி நிதிக்கு ரூ. 801.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாணவிகள் ரூ. 22-8-0, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ரூ. 35;—இப்படியாக மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட ரூ. 801 கொண்ட பண முடிப்பொன்று பொதுச் செயலாளரிடம் தரப்பட்டது. இறுதியாக, பொதுச் செயலாளரின் பாராட்டுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

மு. கருணாநிதி

"தூத்துக்குடி தோழர்கள்மீது சதி வழக்கு—கல்லக்குடி தோழர்களுக்கு ஒன்றரை ஆண்டு கடுங்காவல் தண்டனை—தலைவர்களுக்குத் தரப்பட்ட மூன்று மாத தண்டனை போதாதென்று உயர் நீதி மன்றத்திலே அப்பீல்—இப்படியாக சர்க்கார் நம்மீது அடக்குமுறை அம்புகளை ஏவுவதற்குக் காரணம், நம்மீது ஒரு தவறான கருத்தை நாட்டு மக்களின் உள்ளத்திலே உண்டுபண்ண அவர்கள் விரும்புவதேயாகும்.

சட்டத்தைக் காட்டி, இன்னின்ன குற்றங்களை இவர்கள் செய்துள்ளார்கள்—இவர்கள் சட்டத்தை மதிப்பதில்லை—நாட்டிலே குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள்—என்றெல்லாம் சொல்லி மக்களை நம்ப வைக்க வேண்டுமென்பதற்காகத்தான், ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் பெரும் முயற்சி செய்து நம்மை நீதிமன்றங்களின் நீண்ட படிக்கட்டுகளை ஏறி இறங்கச் செய்கிறார்கள்.

ஜூலை 15-ல், தலைவர்கள் உட்பட ஐயாயிரத்திற்கு அதிகமான தோழர்கள் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டார்கள்—ஏன்? இன்னும் தூத்துக்குடித் தோழர்கள் காவலிலிருக்கிறார்கள்; அவர்கள்மீது ஆயுள் தண்டனை தரத்தக்க கொடிய சட்டங்கள் வீசப்பட்டுள்ளன—ஏன்? கல்லக்குடி தோழர்களுக்கு ஒன்றரை ஆண்டு சிறைக்காவல்—ஏன்? அண்ணா உள்ளிட்ட ஐவர்மீதும் அப்பீல் வழக்கு—ஏன்?

நாம், கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் நிரந்தர சொத்தாகக் கொண்டவர்கள்; அறவழி நிற்பவர்கள்; அகிம்சை வழி செல்பவர்கள்; அமைதியைக் கடைப்பிடிப்பவர்கள்—என்பதை, அரசாங்கத்தாருக்கல்ல — இந்த நாட்டு மக்களுக்கு அறிவிக்க, நம்மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளிலே வெற்றி பெற்றாக வேண்டும். ஆகவே, அந்த வழக்குகளை நடத்த எல்லோரும் நிறைய பணம் தாருங்கள் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

★

என். வி. நடராசன்

"காங்கிரஸ், விடுதலைப்போரில் ஈடுபட்டிருந்த நேரத்திலே, மாணவர்களை எல்லாம், 'கல்லூரியை விட்டு வெளியேறுங்கள்—பள்ளிக்கூடங்களைப் பகிஷ்கரியுங்கள்; என்றெல்லாம் பேசினார்கள் ஆனால், அவர்களே இன்றைய தினம், மாணவர்கள் அரசியலிலே பங்குபெறக் கூடாதென்று உபதேசம் செய்கிறார்கள்.

முன்பு காங்கிரஸ்காரர்கள் எந்த உரிமைகளை எல்லாம் வெள்ளைக்காரன் பறிப்பதாகச் சொன்னார்களோ அந்த உரிமைகளை, இன்றைய தினம் அவர்கள் தர மறுக்கிறார்கள். தூத்துக்குடி வழக்கிலே ஈடுபடுத்தப்பட்டுள்ள தோழர் கே. வி. கே. சாமியின் தாயார் சாகும் வரையிலே, அனுமதிக்கவில்லை — தாயைத் தனயன் பார்ப்பதற்கு — இந்த சர்க்கார்! இந்த சர்க்காருக்கு மனிதாபிமானம் 'கிஞ்சிற்றேனு'மிருந்தால் இப்படி நடந்து கொள்ளுமா?"

★

அ. பொன்னம்பலனார்

"தூத்துக்குடி வழக்கை எதிர்ப்பதின் மூலம் நமது கழகத்திற்கு, அரசாங்கம் தந்திருக்கிற சவாலை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் மீது வீசப்பட்டுள்ள கொடிய குற்றச்சாட்டுகள். நமது கழகத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை விருப்பதினால்தான் நாம் எதிர்வழக்காடுகிறோம். அந்த வழக்குகளை நடத்திச் செல்ல நமக்கு நிறைய நிதி தேவை. இருபதாயிரம் ரூபாய் தேவை எனவோம்—இன்றுவரை சுமார் பதினாயிரம் வரைதான் சேர்ந்துள்ளது.

இதற்கிடையில், அண்ணா உட்பட ஐவர்மீது, தொடரப்பட்டுள்ள அப்பீல்வழக்கு இம்மாதம் 19-ந் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. அதற்குள்ளாகவே, அண்ணா அவர்கள் கேட்டிருந்த இருபதினாயிரம் ரூபாயையும் நாம் சேர்த்தாக வேண்டும்.

மேலும், அண்ணா அவர்கள் தூத்துக்குடியிலும்—கல்லக்குடியிலும் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு நிதி சேர்த்துத் தர வேண்டுமென்கிற எண்ணமும் கொண்டுள்ளார்.

அந்த முயற்சியில் நாம் உடனடியாக ஈடுபட முடியாதவாறு, கல்லக்குடித் தோழர்களுக்குத் தரப்பட்டுள்ள தண்டனையை எதிர்த்து வேறு வழக்காட வேண்டியுள்ளது. அத்தனை வழக்குகளையும் நடத்தவும், வெற்றி பெறவும் நமக்கு நிறைய நிதி தேவையுள்ளது. எனவே, நிறைய நிதி தாருங்கள் என வேண்டிக் கொள்கிறேன்."

சர்க்கார் அப்பீல் அழைப்பு............

—0—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

3 மாதகால சிறை தண்டனை தரப்பட்டது. அபராதம் கட்ட மறுத்து, தலைவர்கள் சிறை தண்டனையை ஏற்றனர்.

ஐவருக்கும் குறைந்த தண்டனையாதலால், தண்டனையின் தன்மையை இன்னும் கடுமையாக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் சார்பில், உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கு, 19—2—54-ந் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருப்பதாகவும், ஐவரும் அன்று உயர்நீதி மன்றத்தில் இருக்க வேண்டுமெனவும் அறிவிப்பு கிடைத்திருக்கிறது.

தோழர் அண்ணாதுரை உட்பட ஐவருக்கும் உயர்நீதி மன்றத்தின் சம்மன் கிடைத்திருக்கிறது.

எண்ணெய் கம்பெனிகள் நிபுணர்கள் குழு

டெஹ்ரான் வருகிறது

லண்டன், பிப். 12—

எட்டு பெரிய எண்ணெய்க் கம்பெனிகளைச் சேர்ந்த 20 நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று அபடான் தென் இரானிய எண்ணெய்ப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிட டெஹ்ரானுக்குப் பிரயாணமாகியிருக்கிறது. இக்குழுவினர், அரசியல் சம்பந்தமான எந்தப்பேச்சுக்களிலும் ஈடுபடமாட்டார்கள். வியாபார நோக்கத்துடன் உண்மைத் தகவல்களை நேரில் அறியவே இக்குழு செல்கிறது.

தாயகம் திரும்புகின்றனர்!

டோக்கியோ, பிப். 11-

கொரியாவில் ஜெனரல் திம்மையாவின் தலைமையிலுள்ள இந்தியத் துருப்புகளில் சுமார் 1,250 பேர் 'ஜுன்னரியாஸ்' என்ற கப்பலில் சென்னைக்கு வந்து சேர இருக்கின்றனர். இவர்களுடன் 88 கொரிய, சீனக் கைதிகளும் வருவார்கள் எனத் தெரிகிறது. இவர்கள் நடுநிலைமை நாட்டில் வசிக்க இணங்கியவர்கள்.

லண்டன், பிப். 12—

மாஸ்கோவுக்கு அதிகமான பிரிட்டிஷ் வியாபாரிகள் பேச்சுவார்த்தை நடத்த அனுப்பப்பட்டு வருகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.